**சுருக்கம்**

உயர்கல்வி – கல்லூரிக் கல்வி – அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் இரண்டாம் சுழற்சி வகுப்புகள் துவங்கப்பட்டமை – ஏப்ரல் 2010 – பணிபுரிந்த கௌரவ விரிவுரையாளர்கள் – உழைப்பூதியம் அனுமதித்து – ஆணை வெளியிடப்படுகிறது.

---

உயர்கல்வி (ஜி1) துறை

அரசாணை (நிலை) எண்.150 | நாள் 22.6.2011
ஆனி 7
திருவள்ளுவர் ஆண்டு 2042

படிக்க:–

1. அரசாணை (நிலை) எண்.380, உயர்கல்வி (ஜி.1)துறை, நாள் 30.10.2006.
2. அரசாணை (நிலை) எண்.338, உயர்கல்வி (ஜி.1)துறை, நாள் 28.9.2007.
3. அரசாணை (நிலை) எண்.391, உயர்கல்வி (ஜி.1)துறை, நாள் 23.9.2008.
4. அரசாணை (நிலை) எண்.309, உயர்கல்வி (ஜி.1)துறை, நாள் 18.8.2009.
5. கல்லூரிக் கல்வி இயக்குநரின் கடித எண். 17219/என் 2/2010, நாள் 8.10.2010 & 25.3.2011.

––––

**ஆணை:–**

மேலே 4ல் படிக்கப்பட்ட அரசாணையில் இரண்டாம் சுழற்சி முறை பாடப்பிரிவுகளுக்கென 1661 கௌரவ விரிவுரையாளர்களை நியமனம் செய்யவும் அதற்கான செலவினம் ரூ.9.966 கோடி (ரூபாய் ஒன்பது கோடியே தொண்ணூற்று ஆறு இலட்சத்து அறுபதாயிரம் மட்டும்) அனுமதித்தும் அரசு ஆணை வழங்கியுள்ளது.

2. கல்லூரிக் கல்வி இயக்குநர் தனது 8.10.10 நாளிட்ட கடிதத்தில் இவ்வாணையில் ஒதுக்கீடு செய்த தொகையினை சார்ந்த 59 கல்லூரிகளுக்கு 31.03.2010 வரை உழைப்பூதியம் வழங்க பகிர்ந்தளிக்கப்பட்டது என்றும் அரசாணையின்படி அனுமதிக்கப்பட்ட 1661 கௌரவ விரிவுரையாளர்களை 2010 ஏப்ரல் 15 பிற்பகலுடன் பணியிலிருந்து விடுவிக்கப்பட்டனர் என்றும் அவ்வாறு விடுவிக்கப்பட்ட 1661 கௌரவ விரிவுரையாளர்களுக்கு 15 நாட்களுக்கு உழைப்பூதியம் வழங்குமாறு கல்லூரிகளிலிருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டு வருகிறது என்றும் தெரிவித்துள்ளார். மேலும் அரசாணை (நிலை) எண்.297, உயர்கல்வி (ஜி1) துறை, நாள்.7.9.2010ல் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் சுயநிதி அடிப்படையில் நடத்தப்பட்ட பாடப்பிரிவுகள் முறையான பாடப்பிரிவுகளாக மாற்றியதைத் தொடர்ந்து அவ்வகுப்புகளை நடத்துவதற்காக நியமிக்கப்பட்ட 977 கௌரவ விரிவுரையாளர்களுக்கு 15.04.2010 வரை பணிபுரிந்ததற்கு ரூ.29,31,000/– (ரூபாய் இருபத்தொன்பது இலட்சத்து முப்பத்தோராயிரம் மட்டும்) நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது என்றும் அதைப்போன்று அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் இரண்டாம் சுழற்சி முறை வகுப்புகளில் ஏப்ரல் 2010ல் 15 நாட்கள் பணிபுரிந்த 1661 கௌரவ விரிவுரையாளர்களுக்கு ஒரு விரிவுரையாளருக்கு ரூ.3,000/– வீதம் 1661 கௌரவ விரிவுரையாளர்களுக்கு 49,83,000/– (ரூபாய் நாற்பத்து ஒன்பது இலட்சத்து எண்பத்து மூவாயிரம் மட்டும்) நிதி ஒதுக்கீடு செய்யுமாறு அரசைக் கோரியுள்ளார்.

3. மேலே பத்தி 2ல் உள்ள கல்லூரிக் கல்வி இயக்குநரின் கோரிக்கையை அரசு கவனமாக பரிசீலனை செய்தபின் அரசு கலை மற்றும் அறிவியில் கல்லூரிகளில் நடைபெற்றுவரும் இரண்டாம் சுழற்சி முறை வகுப்புகளில் 2009–2010 கல்வி ஆண்டில் பணிபுரிய அனுமதிக்கப்பட்ட 1661 கௌரவ விரிவுரையாளர்களுக்கு அவர்கள் ஏப்ரல் 2010 மாதம், 15 நாள்கள் பணிபுரிந்ததற்கான ஊதியம் தர தேவையான செலவினம் ரூ.49,83,000/– (ரூபாய் நாற்பத்தொன்பது லட்சத்து எண்பத்தி மூன்றாயிரம் மட்டும்) ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

4. இச்செலவினம் கீழ்காணும் கணக்கு தலைப்புகளின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

<u>அ. அரசு ஆடவர் கல்லூரிகள் (ரூ.33.72 இலட்சம்)</u>

2202 – பொதுக்கல்வி -03 பல்கலைக்கழகக் கல்வியும் உயர்கல்வியும் 103 அரசுக் கல்லூரிகளும் கல்வி நிறுவனங்களும் - I. திட்டத்தில் சேராதது. AA. கலைக்கல்லூரிகள் (ஆடவர்) - 33 தொழில்முறை சிறப்புப் பணிகளுக்குத் தொகை கொடுத்தல் – 02 ஊதியம் (து.தொ.கு.2202 03 103 AA 3320)

<u>ஆ. அரசு மகளிர் கல்லூரிகள் (ரூ.16.11 இலட்சம்)</u>

2202 – பொதுக்கல்வி -03 பல்கலைக்கழகக் கல்வியும் உயர்கல்வியும் 103 அரசுக் கல்லூரிகளும் கல்வி நிறுவனங்களும் - I. திட்டத்தில் சேராதது. AB. கலைக்கல்லூரிகள் (மகளிர்) – 33 தொழில்முறை சிறப்புப் பணிகளுக்குத் தொகை கொடுத்தல் – 02 ஊதியம். (து.தொ.கு.2202 03 103 AB 3328)

5. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.31546/Edn-I/11, நாள் 20.6.11ல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ரா.கண்ணன்
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
கல்லூரிக்கல்வி இயக்குநர், சென்னை–6.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை –1/5/35 மற்றும் மதுரை.
தொடர்புடைய சார்நிலைக் கருவூல அலுவலர்கள்.
நிதித்துறை (கல்வி.1 / வ.செ.பொது.II), சென்னை–9.
இருப்புக்கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்